பாரதிதாசன் பல்கலை. கல்லூரிகளுக்கு இடையேயான

# செஸ் போட்டியில் திருச்சியை சேர்ந்த மாணவ, மாணவிகள் முதலிடம்

**திருச்சி நவ.7:** பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட திருச்சி, தஞ்சாவூர், நாகை, திருவாரூர், அரியலூர், பெரம்பலூர், கரூர், புதுகை, மயிலாடுதுறை ஆகிய 9 மாவட்டங்களில் இணைவு பெற்ற கல்லூரிகளுக்கு இடையிலான மாணவ, மாணவிகளுக்கான செஸ் போட்டி 5 சுற்று போட்டிகளாக திருச்சி, இருங்களூர் எஸ். ஆர். எம். கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது.

5 சுற்றுகள் கொண்ட செஸ் போட்டியில் 28 கல்லூரிகளிலிருந்து 100க்கும் அதிகமான மாணவர்களும், 27 கல்லூரிகளில் இருந்து 100க்கும் அதிகமான மாணவிகளும் பங்கேற்றனர். 5 சுற்றுகள் முடிவடைந்த நிலையில் மாணவர்கள் பிரிவில் பிஷப் கல்லூரியை 10 புள்ளிகளுடன் முதலிடத்தையும், தேசிய கல்லூரி 8 புள்ளிகளுடன் 2வது இடத்தையும், செயின்ட் ஜோசப் கல்லூரி 8 புள்ளிகளுடன் 3வது இடத்தையும், ஜமால் முகமது கல்லூரி 8 புள்ளிகளுடன் 4வது இடத்தையும் முசிறி, அறிஞர் அண்ணா அரசினர் கலைக் கல்லூரி 7 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்தையும், புதுகை, மாமன்னர் கல்லூரி 7 புள்ளிகளுடன் ஆறாவது இடத்தையும் பிடித்தன.

மாணவிகள் பிரிவில் ஸ்ரீமதி இந்திரா காந்தி கல்லூரி 8 புள்ளிகளுடன் முதல் இடத்தையும், ஜமால் முகமது கல்லூரி 8 புள்ளிகளுடன் 2வது இடத்தையும், நாகை, இ.ஜி.எஸ் பிள்ளை கலை மற்றும் அறிவியல் கல்லூரி 8 புள்ளிகளுடன் 3வது இடத்தையும், திருவாரூர், ராபியம்மாள் அகமது மைதீன் மகளிர் கல்லூரி 7 புள்ளிகளுடன் 4வது இடத்தையும் சீதாலட்சுமி ராமசுவாமி கல்லூரி 7 புள்ளிகளுடன் 5வது இடத்தையும், ஹோலிகிராஸ் கல்லூரி 7 புள்ளிகளுடன் 6வது இடத்தையும் பிடித்தன.

மாணவ, மாணவிகள் பிரிவில் சமமான புள்ளிகள் எடுத்த கல்லூரி அணிகள் பெர்லின் விதி முறைகளின் படி முதல் 6 இடங்கள் நிர்ணயிக்கபட்டன. அதில் மாணவர்கள் பிரிவில் பிஷப் ஹீபர் கல்லூரியைசேர்ந்தமுதலிடம் பிடித்தபி.செல்வமுருகன், மூன்றாவதுஇடம்பிடித்த எம். பரத்கல்யாண், நான்காவது இடம் பிடித்த ஆர். அனுப்சங்கர், 5வது இடம் பிடித்த ஜெ.ஜெ. நவீன், செயின்ட் ஜோசப் கல்லூரியை சேர்ந்த 2வது இடம் பிடித்த எஸ். அபினேஷ், தேசியகல்லூரியை சேர்ந்த ஆறாவது இடம் பிடித்த என். தமிழன்பன் ஆகிய 6 மாணவர்களும், முதலாவது இடம் பிடித்த பிஷப் ஹீபர் கல்லூரியை சேர்ந்த பி. கமலி, 2வது இடம் பிடித்த ஹோலிகிராஸ் கல்லூரியை சேர்ந்த எம். சக்திஸ்ரீ, நாகை, இ.ஜி.எஸ் பிள்ளை கலை மற்றும் அறிவியல் கல்லூரியை சேர்ந்த 3வது இடம் பிடித்த கே. சத்யப்ரியா, திருவாரூர், ராபியம்மாள் அகமது மைதீன் மகளிர் கல்லூரியை சேர்ந்த 4 வது இடம்பிடித்தடி.பி.நபிஸா நெஹால், சீதாலட்சுமி ராமசுவாமி கல்லூரியை சேர்ந்த5வதுஇடம்ஜி.எம். பிரதீபாலஷ்மி, நாகை, ஏ டி எம் மகளிர் கல்லூரியை சேர்ந்த6வதுஇடம்பிடித்த எஸ்.ஜீவிகா ஆகிய 6 மாணவிகளும்திருச்சிபல்கலைக் கழகம் சார்பில் தென் மண்டல அளவிலான பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான செஸ் போட்டியில்பங்கேற்க13ம் தேதி நடைபெற்ற தகுதி பெறும்தேர்வில்தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## இன்றைய நிகழ்ச்சி

பன்னாட்டு கருத்தரங்கம்
இடம்: வித்யா சேவா ரத்னம் கே.சந்தானம் அரங்கம்
ஸ்ரீமதி இந்திரா காந்தி கல்லூரி, திருச்சி
நேரம்: காலை 9மணி,

## ஆட்டோ டிரைவரை தாக்கிய வாலிபர் கைது

**திருச்சி, நவ.7:** திருச்சி கீழசிந்தாமணி பகுதியை சேர்ந்தவர் ஏழுமலை (40). இவர் ஆட்டோ டிரைவராக உள்ளார். சம்பவத்தன்று இவருக்கும் அதே பகுதியை சேர்ந்த எத்திராஜ் (20) பாஸ்கர் (17) ஆகியோருக்கும் இடையே முன் விரோதம் இருந்து வந்தது.

இந்த நிலையில் எத்திராஜ் மற்றும் பாஸ்கர் ஆகியோர் ஏழுமலையிடம் தகராறு செய்து அவரை தாக்கி அடித்து கொலை மிரட்டல் விடுத்தனர். இதில் காயமடைந்த ஏழுமலை, திருச்சி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இதுகுறித்து ஏழுமலை கோட்டை போலீசில் புகார் கொடுத்தார். அதன்பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து எத்திராஜை கைது செய்தனர். மேலும் பாஸ்கரை தேடி வருகின்றனர்.

## கஞ்சா விற்ற மூதாட்டி கைது

**திருச்சி,நவ.7:** திருச்சி மில் காலனி மாரியம்மன் கோவில் தெரு பகுதியில் கஞ்சா விற்கப்பட்டு வருவதாக எடமலைப்பட்டி புதூர் போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து சப்-இன்ஸ்பெக்டர் சேகர் தலைமையிலான போலீசார் அங்கு சென்று பார்த்த பொழுது அதே பகுதியை சேர்ந்த அண்ணாவி என்பவரின் மனைவி சின்ன பொண்ணு (70) என்ற மூதாட்டி கஞ்சா விற்று கொண்டிருந்தார். இதையடுத்து போலீசார் சின்னப் பொண்ணுவை கைது செய்து அவரிடமிருந்து 120 கிராம் கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

வெவ்வேறு இடங்களில்

## மாணவி-மூதாட்டி மாயம்

**திருச்சி, நவ.7:** திருச்சி ஏர்போர்ட் அர்ஜுன் நகரை சேர்ந்தவர் மனோகரன். இவரது 17 வயது மகள் 12ம் வகுப்பு படித்து வருகிறார். சம்பவத்தன்று பள்ளிக்கு சென்றவர் அதன் பின்னர் வீடு திரும்பவில்லை. பல இடங்களில் தேடி பார்த்தோம் எங்கும் கிடைக்கவில்லை இது குறித்து அவரது தந்தை மனோகரன் ஏர்போர்ட் போலீசில் புகார் கொடுத்துள்ளார் அதன்பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து மாணவியை தேடி வருகின்றனர்.

இதே போன்று திருச்சி உறையூர் வெள்ளாளர் தெருவை சேர்ந்தவர் வேலுச்சாமி. இவரது மனைவி அம்பிகா (75) சம்பவத்தன்று வீட்டை விட்டு வெளியே சென்றவர், மீண்டும் வீடு திரும்பவில்லை. இதுகுறித்து அவரது மருமகள் கலைமணி, உறையூர் போலீஸ் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். இதுகுறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து மூதாட்டியை தேடி வருகின்றனர்.